**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதுகுளத்தூர்.**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., பி.எஸ்.சி., பி.எல்.,**
**குற்றவியல் நடுவர்(மு.கூ,பொ). முதுகுளத்தூர்**

**2026 ம் வருடம் மார்ச் திங்கள் 07 ம் நாள் சனிக்கிழமை**

குற்றவியல் பல்வகை மனு எண். 64/2026

சி.பி. எண். 29/2026

1. அழகுமலை (33/26),
த/பெ. முனியசாமி,
ஆனைசேரி,
முதுகுளத்தூர் தாலுகா. ... மனுதார்/ உரிமையாளர்

/ இடையே/

தமிழக அரசுக்காக
சார்பு ஆய்வாளர் ,
முதுகுளத்தூர் காவல் நிலையம்,
இராமநாதபுரம் மாவட்டம்.
குற்ற எண்.52/2026
U/s.115(2), 118(1), 126(2),
296(b), 351(3) BNS ... குற்ற முறையீட்டாளர்

இம்மனுவின் மீதான இறுதி விசாரணை 07.03.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர். திரு.K.பூவலிங்கம், B.A., B.L., அவர்களும், அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை – II திரு.சொக்கேசன் அவர்களும் முன்னிலையாகி வாதிட்டதின் பேரில் இரு தரப்பு வாதங்களையும் உரிய கவனத்துடன் கேட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

1. இம்மனுவானது 503 & 497 BNSS–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் வழக்கு சொத்தான TN–18–BX–1955 என்ற பதிவெண் கொண்ட RENAULT TRIBER EVOLUTION MT என்ற நான்குசக்கரவாகனத்தை இடைக்கால பொறுப்பில் தரக் கோரி மனுவை தாக்கல் செய்துள்ளார்.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.07 13:38:18 +0530

2. மேற்படி தனது TN–18–BX–1955 என்ற பதிவெண் கொண்ட RENAULT TRIBER EVOLUTION MT என்ற நான்குசக்கரவாகனத்தின் மீதும், தன் மீதும் கடந்த 24.02.2026ம் தேதியன்று குற்றமுறையீட்டாளர் காவல் நிலைய குற்ற எண். 52/2026 சட்டப்பிரிவு 115(2), 118(1), 126(2), 296(b), 351(3) BNS–ன் கீழ் வழக்கு பதிவு செய்து பறிமுதல் செய்யப்பட்டு காவல் நிலையத்தில் உள்ளது என்றும், தன் மீது பதியப்பட்டுள்ள வழக்கில் தான் கடந்த 02.03.2026ம் தேதியன்று Crlmp.No.56/2026 என்ற பிணை மனு மாண்புமிகு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து மேற்படி மனு மாண்புமிகு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு தற்போது பிணையில் உள்ளேன் என்றும் மேற்படி TN–18–BX–1955 என்ற பதிவெண் கொண்ட RENAULT TRIBER EVOLUTION MT என்ற நான்கு சக்கர வாகனத்தின் Chasis No. MEERBC006S7232146, Engine No. B4DF424E147297 என்ற நான்கு சக்கர வாகனம் காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் மழை, வெயில் மற்றும் இயற்கை சீற்றத்தால் பாதிப்பு ஏற்பட்டு மேற்படி தொடர்ந்து பயன்படுத்த முடியாத நிலைக்கு பாதிப்புக்குள்ளாகும் என்ற நிலையில் மேற்படி வாகனத்தை குற்றமுறையீட்டாளர்/ எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டியும், அதனைத் தொடர்ந்து இந்நீதிமன்றத்திலிருந்து தனது வசம் ஒப்படைக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்றும் மேற்படி TN–18–BX–1955 என்ற பதிவெண் கொண்ட RENAULT TRIBER EVOLUTION MT என்ற நான்கு சக்கர வாகனத்தை தனது வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் மேற்படி வாகனத்தை விற்கவோ, உருகுலைக்கவோ, எவ்வித மாற்றமோ, வேறு அடமானம் செய்யவோமாட்டேன் என்றும் மேலும் சட்டத்திற்குப் புறம்பான வகையில் பயன்படுத்தமாட்டேன் என உறுதிகூறுகிறேன். மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்கும் பட்சம் நீதிமன்ற உத்தரவுப்படி நடந்து கொள்வதாகவும், தகுந்த பிணையம் அளிக்க தயாராக உள்ளதாகவும், மனுதாரரின் TN–18–BX–1955 என்ற பதிவெண் கொண்ட RENAULT TRIBER EVOLUTION MT நான்குசக்கர வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்காலப்பொறுப்பில் ஒப்படைக்குமாறு

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.07 13:38:33 +0530

மனுதாரர் வழக்கறிஞர் வாதிட்டார்.

3. காவல் துறையினர் பதில் மனுவில் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட TN–18–BX–1955 என்ற பதிவெண் கொண்ட RENAULT TRIBER நான்குசக்கர வாகனத்தை எதிரியானவர் குற்றத்திற்கு பயன்படுத்திய வாகனம் என்பதால் மனுதாரர் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் மேலும் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும் விற்பனை அல்லது உருமாற்றம் செய்யக்கூடும் என்பதாலும் நான்குசக்கர வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க கடும் ஆட்சேபணை தெரிவித்துள்ளனர். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரும் இதே கருத்தை தெரிவித்துள்ளார்.

4. வழக்காவணங்களைப் பரிசீலிக்கையில் மனுதாரர் மேற்படி வழக்குச் சொத்தான TN–18–BX–1955 என்ற பதிவெண் கொண்ட RENAULT TRIBER நான்குசக்கர வாகனத்தை பயன்படுத்தியே குற்ற சம்பவம் நடைபெற்றுள்ளது என அரசுத் தரப்பில் தெரிவித்துள்ள போதிலும் அது குறித்து வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு முடிவு செய்ய இயலும் என்பதாலும், அது வரை TN–18–BX–1955 என்ற பதிவெண் கொண்ட RENAULT TRIBER நான்குசக்கர வாகனத்தை பயன்படுத்தாமல் காவல்நிலையத்தில் வைத்திருந்தால் வாகனத்தின் பாகங்கள் பழுதடையக்கூடும் என்பதாலும், எதிர்காலத்தில் அது பயனற்ற நிலைக்கு போய்விடும் என்பதாலும், அதன் மறுமதிப்பு குறைந்து போய்விடும் சூழ்நிலை ஏற்படும் என்பதாலும், **மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் எதிர் குஜராத் மாநிலம் (2002(10) SSC 253) வழிகாட்டுதலின் படியும் மற்றும் Criminal Rules of Practice 2019 Rule 257(1)ன் படி** வழக்குச் சொத்தை இடைக்காலமாக ஒப்படைப்பதே நீதியின் நலனுக்கு சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. முடிவில் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து உரிமையாளரான மனுதாரர் வசம் வழக்குச் சொத்தை இடைக்காலமாக ஒப்படைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.07 13:39:02 +0530

**<u>நிபந்தனைகள்;–</u>**

1. மனுதாரர் மேற்படி வழக்குச் சொத்தான TN–18–BX–1955 என்ற பதிவெண் கொண்ட RENAULT TRIBER நான்குசக்கர வாகனத்திற்கு ஈடாக தலா ரூ.3,00,000/– (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) இருநபர் பிணையம் வழங்க வேண்டும் எனவும்,

2. வழக்கு சொத்து ஒப்படைக்கப்பட்ட காலகட்டத்தில் மனுதாரர் வழக்கு சொத்தினை உருமாற்றம் செய்யவோ, விற்பனை செய்யவோ, அடமானம் வைக்கவோ முயற்சிக்ககூடாது.

3. வழக்கின் சொத்தின் RC புத்தகத்தின் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட பிறகு பெற்று செல்லவேண்டும்

4. இந்த வழக்கு சொத்தினை விசாரணை காலத்திலும், நீதிமன்றம் கோரும் போது ஒப்படைக்க வேண்டும்.

5. இந்த நீதிமன்றத்தில் வழக்கு சொத்திற்கான புகைப்படம் சி.டி, ஆகியவற்றினை மனுதாரர் ஒப்படைக்க வேண்டும்.

6. இந்த வழக்கு சொத்திற்கான பஞ்சநாமா தலைமை எழுத்தர் எழுதி பெற்றிட வேண்டும்.

7. மேற்படி வாகனத்தை அரசுக்கு ஆதாயப்படுத்தும் நடவடிக்கைக்காக கேட்கும் போது உடன் எந்தவித காரணமும் சொல்லாமல் இந்நீதிமன்றத்திலோ அல்லது விசாரணை நீதிமன்றத்திலோ அல்லது நீதிமன்றம் உத்தரவிடும் அதிகார வரம்பிடமோ ஒப்படைப்பேன் என்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் எனவும்,

8. மேற்படி நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு தன்னிச்சையாக ரத்து செய்யப்பட்டு, மேற்படி வழக்கு சொத்தானது அரசுக்கு ஆதாயம் செய்வதற்கான நடவடிக்கை தொடங்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.07 13:39:14 +0530

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு (07.03.2026) இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.07 13:39:23 +0530

நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),
முதுகுளத்தூர்.